பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு 10

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# தமிழரின் பாரம்பரிய விளையாட்டு - கபடி

சபையில் வீற்றிருக்கும் நடுவர்களே! சபையோர்களே! என் சக மாணவ மாணவிகளே! யாவருக்கும் என் மதிய நேர வணக்கங்கள் !!!

நான் இன்று உங்கள் முன் தமிழரின் பாரம்பரிய விளையாட்டான “கபடி” என்ற தலைப்பில் பேச வந்துள்ளேன்.

கபடி விளையாட்டானது நான்காயிரம் ( 4000 ) ஆண்டுகளுக்கு முன் தமிழர்களால் உருவாக்கப்பட்டு காலங்காலமாக கிராமப்புறங்களில் விளையாடப்படும் விளையாட்டாகும். இப்போது கபடியானது தமிழர்கள் மட்டுமன்றி பிற இனத்தவர்களாலும் விரும்பி விளையாடும் விளையாட்டாக மாறியிருப்பது தமிழரின் பாரம்பரியத்துக்கு உலகளவில் கிடைத்த அங்கீகாரமாகும்.

1980 இல் கபடி விளையாட்டு முதன் முதலில் ஆசிய மட்டப் போட்டிகளிலும் பின்னர் 2004இல் உலகளாவிய போட்டிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. கபடி விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் மட்டுமன்றி, பெண்களும் விளையாடி உலகக் கோப்பையையும் வென்றுள்ளனர்.

**கை + பிடி** விளையாட்டு பிற்காலத்தில் மருவி **கபடி** என்று மாறிவந்துள்ளது. ஏறு தழுவுவதற்கு முதல்நாள் உடற்பயிற்சிக்காகவும் மாட்டினை அடக்கும் பயிற்சிக்காகவும் கபடி விளையாடப்பட்டது. இது பிற்காலத்தில் அரசர்களாலும், இளைஞர்களாலும் மண்ணை, பெண்ணை வெல்லும் நோக்கில் விளையாடப்பட்டது.

கபடி ஆடுகளமானது மேடு பள்ளமற்ற சமதரையில் அமைந்திருக்கும். வீரர்கள் விளையாடும் போது விழுதலும், இழுபடுதலும் இயல்பு என்பதால் ஆடுகளத் தரையானது பஞ்சு, தரைமண், மணல் அல்லது பஞ்சு மெத்தையால் பரப்பப்பட்டிருக்கும்.ஆடுகளத்தைச் சுற்றி எல்லையைக் குறிக்கும் கோடுகள் வரையப்பட்டிருக்கும்.

கபடி பதினான்கு வீரர்கள் கொண்ட ஒரு குழு விளையாட்டாகும். வீரர்கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒருகுழு ஆடுகளத்திற்குள்ளும் மற்றைய குழு வெளியிலிருந்து ஓவ்வொருவராக உள்ளே கபடி கபடி என்று மூச்சு விடாது பாடி கொண்டு ஆடுகளத்தினுள்ளவர்களை தொட்டு விட்டு வெளியேறுவதன் மூலம் புள்ளிகள் வழங்கப்பட்டு வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும்.



இது எளிமையான, செலவு குறைந்த உடல் உள ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் விளையாட்டாகும். இதை மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடி மகிழ்வுறுவது மட்டுமன்றி வருங்கால சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுப்பேன் என்று உறுதி கூறி அமர்கிறேன்.

நன்றி வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. ரதி சங்கர்